**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.6/2022**

2026=ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.1 விஜயகுமார் வயது 35, த/பெ ராஜேந்திரன்**

**நேரம் -1.00**

**குறுக்கு விசாரணை**

நான் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வள்ளியம்மாள் என்பவருக்கு 2ம் நிலை வாரிசுதாரர்கள் விளம்புகை செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். வாரிசு சான்றிதழ் நான் எதற்காக கேட்டுள்ளேன் என்றால் வள்ளியம்மாள் பெயரில் உள்ள சொத்துக்களை எங்களுக்கு பிரித்து கொள்ள வாரிசு சான்றிதழ் கோரியுள்ளேன். வள்ளியம்மாள் பெயரில் எவ்வளவு சொத்து, எங்குள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வள்ளியம்மாள் பெயரில் உள்ள சொத்து எங்குள்ளது, சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் இரும்பேடு கிராமத்தில், சர்வே எண். 147 விஸ்தீரணம் 2 ஏக்கர் ஆகும்.

2. வழக்கை தாக்கல் செய்த 1ம் வாதிக்கு 2ம் நிலை வாரிசுதாரர் சான்றை பெற்று வள்ளியம்மாள் பெயரில் உள்ள சொத்துக்களின் பட்டா மாற்றம் செய்யதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கருக்கான சொத்திற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 5ம் வாதி கீதா வள்ளியம்மாளுக்கு என்ன உறவுக்காரர் என்றால் பேத்தி முறை ஆகும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3. குடும்ப அட்டையில் வள்ளியம்மாள் மற்றும் கீதா பெயர் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் இறந்த 1ம் வாதி மற்றும் நான் வள்ளியம்மாள் பெயரில் உள்ள ஆவணத்தில் எங்கள் பெயர் உள்ளது போல் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. நான் இறந்த வள்ளியம்மாளுக்கு என்ன உறவுமுறை என்பதற்கான உறவுமுறை பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வள்ளியம்மாள் ஆவண எண்.2312/

1970 ன்படி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் அசலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேப்போல் ஆவண எண்.1227/1960, 3632/1971 ஆகிய 2 ஆவணங்களை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேப்போல் 1952 வருடத்தில் கூர் சீட்டு மூலம் பாகம் பிரித்து கொண்டதாக சொல்லியுள்ளேன், அந்த கூர்சீட்டின் அசல் அல்லது சான்றிட்ட நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நான் 2ம் நிலை வாரிசுதாரர் என்று விளம்புகை கேட்ட பரிகாரம் அரசாணை 110, 2022க்கு எதிரானது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேற்படி 2ம் நிலை வாரிசுதாரர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இவ்வழக்கு சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி சரியான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தாத காரணத்தினாலும், அரசாணை மற்றும் நீதிமன்ற உத்தரவினை பின்பற்றாமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்த போது எழுந்த எல்லா பரிகாரமும் கோரி வழக்கை தாக்கல் செய்யாததால் அது கட்டளை 2 விதி 2 சிபிசிபடி தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.**

**நேரம் - 1.20**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,Arni
Arni